"...
... ... ... ... ... ..."

- சுவாமி விவேகானந்தர்

*"The greatest glory in living lies not in never falling, but in rising every time we fall"*

**- Nelson Mandela**

*"Economic growth without investment in human development is unsustainable and unethical"*

**- Amartya Sen**




...த்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
...தர மதிப்பீடு மற்றும் ஐ.எஸ்.ஓ. 9001 - 2015 தரச்சான்றிதழ் பெற்றது
...காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001.
...@ngmc.org Website : www.ngmc.org

...வளர்ச்சியில் இலக்கியம், சமூகவியல் மற்றும் பொருளாதாரத்தின் பங்களிப்பு – 02

# ROLE OF LITERATURE, SOCIOLOGY AND ECONOMICS IN THE DEVELOPMENT OF MANKIND


(INTERNATIONAL VIRTUAL CONFERENCE)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. மகாலட்சுமி

முனைவர் க. மங்கையர்க்கரசி

முனைவர் நிர்மலா ...



தமிழ், வரலாறு மற்றும் பொருளாதாரத் துறைகள்

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

தேசிய மீள்தர மதிப்பீடு மற்றும் ஐ.எஸ்.ஓ. 9001 - 2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001

# பொருளடக்கம்


1. சங்கத் தமிழர் பாரம்பரிய உணவே மருந்து 1
முனைவர் ஆ. மகாலட்சுமி

2. மானுட வளர்ச்சியில் சங்ககால வேளாண்தொழிலின் பங்களிப்பு 10
முனைவர் த. கீதாஞ்சலி

3. குடிநீர்ப் பற்றாக்குறையும் கிராமிய நீர்வழங்கல் உபாயங்களும்: இலங்கையை மையப்படுத்தியது 17
எம். றிஸ்வான்

4. திருக்குறள் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள் 28
முனைவர் பே. மஹேஸ்வரி

5. கலித்தொகையில் முல்லை நில மக்களின் வாழ்வியல் 33
நா. ரம்யா

6. அபிவிருத்தித் திட்டங்களில் சமுதாயப் பங்கேற்பின் வகிபாகம் குறித்த மதிப்பீடு 36
எம். றிஸ்வான்

7. திருக்குறள் கூறும் அறம் 47
உ. மணிமேகலை

8. இந்துக்களின் அறிவியற் புலத்தில் சரக சம்ஹிதையின் தனித்துவம் 51
திருமதி ருஜானி நிமலேஸ்வரன்

9. மானுட வளர்ச்சியில் இலக்கிய சமூகவியல் பொருளாதார மற்றும் அறிவியலின் பங்களிப்பு 56
சு. மாரியம்மாள்

10. இரட்டைக் காப்பியங்களில் நாகர் இன மக்களின் வாழ்வியல் 58
திருமதி ப. மணிமேகலை

11. An Economic Study of Milk Co-Operative Societies in Tamil Nadu 63
Dr P. Shyamala

12. DR. MUTHULAKSHMI REDDY – A LEGEND 69
Dr.V.Sathiya




Scanned with CamScanner

Scanned with CamScanner

# மானுட வளர்ச்சியில் இலக்கிய, சமூகவியல் மற்றும் பொருளாதாரத்தின் பங்களிப்பு – 02


| | |
|---|---|
| பதிப்பாசிரியர்கள் | முனைவர் ஆ.மகாலட்சுமி, முனைவர் க.மங்கையர்க்கரசி, முனைவர் நிர்மலா சதீஷ் |
| உரிமை | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | மார்ச், 2022 |
| வெளியீடு | தமிழ், வரலாறு மற்றும் பொருளாதாரத் துறைகள் என்ஜிஎம் கல்லூரி, பொள்ளாச்சி |
| வடிவமைப்பு | கீதாஞ்சலி, பொள்ளாச்சி - 6382051866 |
| அச்சு | அபயம் பதிப்பகம், கோவை |
| பக்கங்கள் | x + 140 |
| ISBN | 978–81–954891–1–4 |
| விலை | ரூ.400/– |


Scanned with CamScanner

## உறுதி மொழி

வீரத்துறவி விவேகானந்தப் பேரொளியே! மாணவ, மாணவியராகிய நாங்கள் தங்களுக்குத் தரும் உறுதிமொழி:-

அரிதான இந்த மானுடப் பிறப்பை அலட்சியம் செய்யாமல், பொறுப்போடு வாழ்ந்து, செயற்கரிய காரியங்களைச் செய்வோம்!

தாங்கள் காட்டிய ஞான மார்க்கத்தைப் பின்பற்றி எங்களுள் புதைந்து கிடக்கும் அளவற்ற அறிவையும், ஆற்றலையும் முழுமையாக வெளிப்படுத்தி, உன்னத இலட்சியத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்து, வித்தியாசமாகச் சிந்தித்து, துணிவோடு செயல்பட்டு புதிய சரித்திரம் படைப்போம்!

சாதி, மத, இன உணர்வுகளை எல்லாம் கடந்து நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வோடு செயல்பட்டு, நாட்டின் ஜனநாயகத்தையும், ஒருமைப்பாட்டையும் போற்றிப் பாதுகாப்போம்!

பாரம்பரியச் சிறப்புமிக்க நம் கலாச்சாரத்தை எந்நாளும் கட்டிக் காப்போம்!

நவீன விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி தேசத்தின் சமூக, பொருளாதார அந்தஸ்தை உயர்த்தி, பாரதத்தை 21ஆம் நூற்றாண்டில் உலகை ஆளும் வல்லரசாக உருவாக்குவோம்!

எங்களுக்கு அமைந்த வாழ்வையும், வாய்ப்பையும் முறையோடு பயன்படுத்தி, நாங்களும் வாழ்க்கையில் உயர்ந்து, எங்களை உயர்த்திய சமுதாயத்தையும் உயர்த்துவோம்!

இந்தக் கனவை நனவாக்கும் வரை ஓயமாட்டோம்!
இது சத்தியம்! வந்தே மாதரம்!

- டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

Scan Me

கட்டுரை

ISBN 978-81-2344-448-2
Code No. A 4802 ₹ 360/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும்

# சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும்



தொகுப்பாசிரியர்கள்
பேரா. க. ஸ்ரீனிவாசன்
முனைவர் க. தனலட்சுமி
முனைவர் பொ. அர்ச்சனா
சுவாமி விவேகானந்தர் மாணவர் சிந்தனை மன்றம்
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி - 642 001

Scanned with CamScanner

# சுவாமி விவேகானந்தரும் மகாகவி பாரதியாரும்

## (பன்னாட்டுக் கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர்கள்

பேரா. க. ஸ்ரீனிவாசன்

முனைவர் க. தனலட்சுமி

முனைவர் பொ. அர்ச்சனா

சுவாமி விவேகானந்தர் மாணவர் சிந்தனை மன்றம்

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி-642 001

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41- பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை- 600 050.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Scanned with CamScanner

# பொருளடக்கம்


1. விவேகானந்தரும் பாரதியும் நவீன பாரதத்தின் இரு கண்கள் — 13
   -**அனுஷதாசன்**

2. சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள் — 19
   -**பேரா.க.ஸ்ரீனிவாசன்**

3. பாரதி என்றொரு கவிக்குயில் — 23
   -முனைவர் **பே.மகேஸ்வரி**

4. பாரதியின் கவிதை நுண்ணுணர்வு அடிப்படைகள் — 27
   -**தே.ஆனந்தன்**

5. மகானும் மகாகவியும் — 33
   -முனைவர் **க.தனலட்சுமி**

6. பாரதியின் வசன கவிதைகளில் செறிவுணர்வாக்கம் — 39
   -முனைவர் **பா.செல்வகுமார்**

7. சுவாமி விவேகானந்தரின் பார்வையில் இளைஞர்கள் — 45
   -முனைவர் **எம்.வி.சத்தியபாமா**

8. தேச நலனில் தன்னைக் கரைத்த வீரத்துறவியும் மகாகவியும் — 50
   -முனைவர் **த.பரமேசுவரி**

9. விவேகானந்தரும் பாரதியும் வழங்கிய சிந்தனைக்கொடைகள் — 57
   -முனைவர் **சு.செல்வக்குமார்**

10. பாரதியின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் — 62
    -முனைவர் **த.கீதாஞ்சலி**

11. விடுதலை நோக்கில் பாரதியின் சமூக - சாதியப் பார்வை — 67
    -முனைவர் **அ.திவ்யா**

12. பெண்மையின் ஒளி பாரதி — 73
    -முனைவர் **இரா.விஷ்ணுப்பிரியா**


Scanned with CamScanner

# 10. பாரதியின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

முனைவர் த.கீதாஞ்சலி,
தமிழ் உதவிப்பேராசிரியர்,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

பைந்தமிழ்த் தேர்ப்பாகன் - செந்தமிழ்த் தேனீ - சிந்துக்குத் தந்தை . கவிதைக் குயில் எனப் போற்றப்படுபவர் பாரதி. இவருக்கு நாட்டு விடுதலை என்பது நீங்கா கனவு. ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் என்பது இலட்சியம். பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, விழிப்புணர்வு போன்றவை நாடித்துடிப்பு. மகாகவி பாரதியார் இந்த யுகத்தின் ஈடு இணையற்ற கவிஞர் மட்டுமல்ல, ஒரு மாபெரும் தீர்க்கதரிசியும் ஆவார். இவரின் கவிதைத் திறமும் தேசபக்தியும் வாழ்க்கை அமைப்பும் ஒன்றுடன் மற்றொன்று பின்னிப் பிணைந்து சிறப்புப் பெற்றவை. பாரதியின் வசன கவிதைகள், கட்டுரைகள், கதைகள் ஆகியன தமிழ் மக்களின் கருத்தையும் கவனத்தையும் கவரும் வகையில் எழுதப்பட்டவை.

எண்ணத்தில், சொல்லில், செயலில் யாவற்றிலும் புதுமையும் புரட்சியும் உண்டாக்குவதே பாரதியின் பண்பாடாகும். கவிஞர்கள் உருவாக்கப்படுவதில்லை. கவிஞர்களாகவே பிறக்கிறார்கள். அவ்வாறு தேசியக்கவியாகவே பிறந்தவர் பாரதி. தேசிய உணர்வும் தமிழ் உணர்வும் இரண்டறக் கலந்து அவரின் உடலில் குருதியாகவே ஓடியது என்றால் அது மிகையாகாது.

எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள்,
எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர் - நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

என முரசொலித்துப் பாடிய பாரதியின் நெஞ்சம் சமத்துவத்தையும் நாடியது. எல்லோரும் ஓர் குலம் எனக் கூறுவதே கடினம் என்னும் இக்காலத்தில், எல்லோரும் இந்நாட்டு மன்னர் என ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ நிலையை வலியுறுத்திப் பேசியவர் பாரதி எனில் இது சாலப் பொருந்தும்.



பாரதியின் பாடல்கள் ஒவ்வொன்றும் வீரம் உள்ளவை. ஜீவன் உள்ளவை. நெடிதுயர்ந்து என்றும் வாழக்கூடியவை. படிப்பவர் கோழையானாலும் உணர்ச்சியற்றவராயினும் அவரை சிறிதேனும் சலனம் அடையச் செய்யும் ஆற்றல் பெற்றன அவரது பாடல்கள் எனலாம். எப்பொருளானாலும் நீதி எதுவானாலும் அறம் என்றால், தருமமெனில் எல்லோருக்கும் நன்மை தருவதெனில், முதலில் அதைத்தான் மார்தட்டிக் குரல் கொடுக்கும் வகையில் பாட்டு எழுதுவார். பாரதியின் சொல் புதிது, பொருள் புதிது, பொருள் புதிது மட்டுமல்ல அது தரும் வினைபுதிது. அவ்வினையின் ஆற்றல் புதிது. ஆற்றலின் வீராவேச சுகம்புதிது எனலாம். எப்பொருளைப் பாடினாலும் அதில் சிறிது வீரமும் கவிதைத் தீவிரமும் கலந்திருக்கும். இப்பேர்பட்டவரின் நெஞ்சம் சமத்துவத்தைப் பெரிதும் விரும்பியது. நல்ல சமுதாயத்தைத் தேடியது. வளர்ந்த நாட்டை, தீமையை எதிர்க்கும் வீரமிக்க மக்களை அழைத்தது. சிறுபூச்சானாலும், பெரும் பறவையானாலும் அதிலெல்லாம் அழகுக்கு மனம் அலைபாய்ந்த உள்ளம் இம்மகாகவி பாரதியின் உள்ளம். இப்படி பாரதியின் நெஞ்சில் இருந்த நீங்கா கனவுகள், விருப்பங்கள், கொள்கைகள் என்ன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## தேசபக்தி

தேசத்தில் தோன்றிய மக்களுள் உயர்வு தாழ்வு பாராட்டி வாழ்வது தேச பக்தி ஆகாது. நமது நாட்டில் ஜாதி பேதத்தால் சாதி பக்தி நிலவுகின்றதேயன்றித் தேசபக்தி நிலவுதல் அரிதாக இருக்கின்றது. அன்பில் சிறந்த பாரதியார்க்கோ சாதி பக்தி தோன்றியதில்லை. தேசக் கலை புணர்ந்த ஒருவருக்கு சாதிபக்தி எங்ஙனம் தோன்றும்? பாரதியாரைத் தேசபக்தியேவிழுங்கி நின்றது.

வந்தே மாதரமென்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குதுமென்போம்
ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மமித் தேசத்திலெய்தின ராயின்
வேதிய ராயினுமொன்றே - அன்றி
வேறு குலத்தின ராயினுமொன்றே
பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே -வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே
எல்லோருமொன்றெனும் காலம் வந்ததே

இது போல் இன்னும் பற்பல பாடல்கள் இவர் எழுதியுள்ளார். இப்பாடல்களிலிருந்தே அவருடைய தேசபக்தியைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

Scanned with CamScanner

பொதுவுடைமை

பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம் என்று பாடியதன் மூலம் மனித உலகத்தின் நச்சுத்தன்மை உடைய முதலாளித்துவத்தை வளர்க்கும் வேலை, கூலி, உபரி, உழைப்பு என்ற தத்துவத்தை எளிதில் விளக்குகின்றார். உழைப்பாளிகள் உழைத்து உற்பத்தி செய்யும் பொருட்களில் உரிய கூலி தராது வரும் பகுதியே சுரண்டலாகி மூலதனமாகிறது. உழைப்பிற்குப் பயன்படாது உடம்பில் சேரும் கொழுப்பும் சர்க்கரையும் நாளடைவில் நீரிழிவு நோயாகி உடலை வருத்துதல் போல், உழைப்பாளருக்கு உரியவாறு பயன்படாது சுரண்டலால் சேமிக்கப்பெறும் மூலதனம், காலப்போக்கில் மனித குலத்தை அடிமைத் தனத்துக்கு ஆளாக்குகிறது. நீரிழிவு நோயினும் இது கொடுமையானது. அதனால் பாரதி தான் விரும்பிய பாரத சமுதாயத்திற்கு,

> முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
> முழுமைக்கும் பொதுவுடைமை

என்றே இலக்கணம் வகுக்கிறான். அவனது முழக்கம் எல்லோரும் ஓர் குலம் என்பதேயாகும். ஒரு நூற்றாண்டு ஓடிவிட்டது. பாரதி வழியில் பசுமைப் புரட்சியும் தொழிற் புரட்சியும் நடைபெற்றுள்ளன. ஆயினும் பொதுமைப் புரட்சி நடைபெறவில்லை. நூற்றாண்டு விழா நினைவாகவாவது புராண நாடு புதுமை படைக்குமா? பொதுவுடைமை படைக்குமா? என்பதே கேள்வி.

சாதி ஒழிப்பு

சமுதாய அமைப்பில் சாதி என்பது மக்களிடையே மிக்க வேறுபாட்டுணர்வை வளர்க்கும் நஞ்சாகும். இச்சாதியே மனித குலத்தில் ஏற்றத்தாழ்வைத் தோற்றுவித்தது. பெரும்பான்மை சண்டைகளும் பூசல்களும் சாதியால்தான் வருவதென்பது பிராமண குலத்தில் பிறந்த பாரதி நன்குணர்ந்த உண்மையாகும். மனிதநேயத்தை, சமத்துவத்தை, ஒற்றுமையைச் சீர்குலைக்கும் இச்சாதி ஒழிய வேண்டுமென எண்ணி, தான் ஒரு பிராமண குலத்தில் பிறந்தமைக்கு மிக வருந்தினார். வருணம், குலம், சாதி என்ற பிரிவுகளை வேரறுக்க வேண்டுமென விழைந்தார். இதை எண்ணியே,

> சூத்திரனுக்கொருநீதி - தண்டச்
> சோறுண்ணும் பார்ப்பனுக்கு வேறொரு நீதி
> சாத்திரம் சொல்லிடுமாயின் - அது
> சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்



என குலத்துக்கு ஒரு நீதி இருந்த அவலத்தைக் கண்டு கோபம் கொண்டு குரல் கொடுக்கிறார். சாதி இரண்டொழிய வேறில்லை என்றே 'தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்' என ஆண், பெண் என்னும் இரண்டு சாதிகள் தவிர வேறு இல்லை என்றார். அந்நிலையை அமிர்தமென்றார். ஆனால், இதிலும் குறை வருமென்று எண்ணினாரோ என்னவோ, சாதிகள் இல்லையடி பாப்பா- குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என ஆண், பெண் என்னும் இரண்டு ஜாதிகள்கூட இல்லை என விரைந்து கூறுவது எதற்கென்றால், மக்கள் இதிலும் சண்டையிடக்கூடாது என எண்ணியே எனலாம்.

பெண் கல்வி

பாரதி பெண் கல்வியைப் பலவாறு வற்புறுத்துகிறான். கவிதைகள், கட்டுரைகள், கதைகள், சொற்பொழிவுகள் போன்றவற்றில் பாரதி பெண் கல்வியைப் போற்றுகின்றான். உலகம் பேதைமை நீங்கி வாழப் பெண் கல்வியே வழிவகுக்கும் என்பதைப் பாரதி,

> பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
> பேதமை அற்றிம் காணீர்

என்று பாடுகிறார். பெண்கள் கல்வியால் பெறும் பயன்கள், கல்வியில்லாமையால் பெறும் துன்பங்கள் என இரு நிலைகளிலும் பாரதி பெண்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகிறார்.

> நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்
> நீசத் தொண்டும் மடமையும் கொண்டதாய்
> தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
> சாலவே அர்தாகுமோர் செய்தியாம்

நிலத்தின் தன்மைக்கு ஏற்பவே பயிர் விளையும். அதுபோலவே, தாய் நற்புத்திரர்களையே பெற வேண்டும். நன்மக்களே பிறக்க வேண்டும் என்று பெரிதும் விரும்ப வேண்டும். தன் மக்கள் உயர்வும் பெருமையும் மனமகிழ்வும் வேண்டும் என்று பாரதி பாடுகிறார். கல்வியானது பெண்ணின் ஒழுக்கத்தை, கற்பைப் போற்றி வளர்க்கவும், காக்கவும் துணை செய்ய வேண்டும் என்பதைப் பாரதி தமது கவிதையில் தெளிவாக உணர்த்துகிறார்.

பெண் விடுதலை

ஒவ்வொரு நாட்டின் மேன்மையோ தாழ்மையோ அந்நாட்டு மாதர்களைப் பொறுத்திருக்கின்றது. இவ்வுலகத்தில் எல்லா தேசங்களும் மேம்பட்டு வரும் இக்காலத்தில், பழம் பெரும் நாடாகிய நம் பாரத நாடு மட்டிலும் உறங்கிக்கிடக்கின்றது. இதன் காரணம்

Scanned with CamScanner

என்ன? நமது பெண்களின் அறிவின்மையே காரணம். புத் புத்தகங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் நமது நா பெண்களுக்கு நல்லறிவு பிறப்பித்து, அவர்களின் நிலைமையை உய வேண்டுவதே நமது நாட்டாரின் கடமை. இதை மறந்தவன் நா நாட்டிற்கு விரோதி.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னி லெந்த
வகையினும் நமக்குள்ளே
தாத ரென்ற நிலைமை மாறி
ஆண் களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வ மிந்த நாட்டிலே

இன்றைய காலக்கட்டத்தில் பல்வேறு இயக்கங்கள், சட் உரிமைகள் நம் பெண்டிற்கு ஏற்படுத்தப்பட்டாலும், எந்த உரிமையு இல்லாத காலத்தில் மகளிர்க்கு ஆதரவாகக் குரல் எழுப்பிய பாரதியி நிலை, பெண்கள் முன்னேற்றத்தில் ஒரு தொடக்கமாக அமைந்த என்றால் அது சற்றும் மிகையல்ல.

## முடிவுரை

காலந்தோறும் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களையும் அத போக்கினையும் உள்வாங்கிக்கொள்பவனே சிறந்த படைப்பாளியாகிறான் பாரதி, சமகாலப் போக்கினைப் புரிந்துகொண்டு படைப்பை வெளிப்படுத்தியதில் தன்னிகரில்லாதவனாக இருக்கிறான். தமத கருத்துக்களையெல்லாம் எழுத்துக்களாக்கிப் பத்திரிகையில் வடித்துக் காட்டி, தேச விடுதலை பற்றிய விழிப்புணர்வைத் தமிழகம் எங்கும் பரப்பிச் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட மாபெரும் எழுத்தாள மகாகவி பாரதியாவார். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று சொல்லும் போது இன்னும் நமக்குள் சமத்துவம் ஓங்கி நிற்கச் செய்தவ மகாகவி பாரதி. இவர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டினை இன்னும் எத்தனை கட்டுரைகளில் வேண்டுமானாலும் எழுதிக்கொண்டே இருக்கலாம்.